[1973 நவம்பர் 23

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) 18,713 குடும்பங்கள்.

(உ) 17—4—1973 முதல் 12—5—1973 வரையிலான நான்கு வார காலத்துக்கு அரிசியும் மரவள்ளிக்கிழங்கும் இலவசமாக வழங்கியதன் மூலம் அரசு ரூ. 3,33,852 உதவி வழங்கியது.

திரு. என். டென்னிஸ் : அவர்களுக்கு பஞ்ச காலம் தீரும் வரையில் நிவாரணம் கொடுக்கவில்லை. இம்மாதிரி பஞ்சம் இருக்கும் காலத்தில், பஞ்சம் தீருகின்ற வரையில் நிவாரணம் அளிப்பதற்கான திட்டங்களை அரசு வகுத்து செயல்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய சிபார்சின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன பிரகாரம் உதவி வழங்கப்படுகிறது. அவ்வப்பொழுது நிலைமையைப் பொறுத்துத்தான் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இப்பேர்ப்பட்ட பஞ்ச நிவாரணங்கள் அளிக்கும்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனை கேட்டு செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனையைக் கேட்டு செய்வதைவிட, மாவட்டத்தில் இருக்கிற மாநில மீனவர்கள் ஆலோசனைக் குழுவில் உள்ள உறுப்பினர்களைக் கலந்து செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாவட்ட ஆட்சித் தலைவர் மீன்வள இயக்குநரைக் கலந்துதான் முடிவு எடுப்பார். அப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை அனுப்பும்பொழுது சம்பந்தப்பட்ட அனைவரையும் விசாரித்து, கலந்துகொண்டுதான் அறிக்கை அனுப்புகிறார். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் கருத்து மனதில் கொள்ளப்படும்.

Persons affected by fire accident near Nehru Park.

* 348 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a large number of huts were gutted near Nehru Park at Kilpauk, Madras, about 10th February 1973; and

(*b*) if so, the details thereof?

1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) 1973 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதி அன்று காலை 4 மணி அளவில் கீழ்ப்பாக்கத்தில் அண்ணநகர் சாஸ்திரி நகர் குடிசைப் பகுதிகளில் ஒரு தீ விபத்து நடந்தது. ஒரு மண்ணெண்ணெய் விளக்கு, இரவில் குடிசைவாசிகள் உறங்கும் பொழுது கீழே விழ்ந்ததன் காரணமாக இவ்விபத்து ஏற்பட்டது. 81 குடிசைகள் தீக்கிரையாயின. இந்த விபத்தில் உயிர்ச்சேதம் ஏதுமில்லை. இதனல் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 16,200 என்று கணக்கிடப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 80 வீதம், 57 குடிசை சொந்தக்காரர்களுக்கு வீடுகளைத் திரும்பிக் கட்டுவதற்கும், துணிகள் வாங்குவதற்குமாக ரூ. 4,560 வழங்கப் பட்டது. இதைத் தவிர 10 குடிசைகளில் குடியிருந்தவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 20 வீதம், துணிகள் வாங்குவதற்காக ரூ. 200 வழங்கப்பட்டது. எஞ்சியுள்ள 14 குடிசைகள் தீ விபத்தின்பொழுது காலியாக இருந்தன. பாதிக்கப்பட்டவர்களுக்கு, அருகில் இருக்கும் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் தங்குவதற்கு இடவசதி அளிக்கப் பட்டது. மாநகராட்சி அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கினர்.

திரு. என். டென்னிஸ் : பாதிக்கப்பட்டவர்களுக்கு 'மணி காம் பென்சேஷன்' கொடுப்பதைவிட, மெடீரியல்ஸாகக் கொடுப்பதற் கான திட்டங்களை அரசு வகுத்து செயல்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு திட்டம் இல்லை. இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் குடிசை மாற்று வாரியம் சீரமைப்பதாக அறிவித்துள்ளது. குடிசை மாற்று வாரியத்தின் அதிகாரிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்திருக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றிய ஏரிகள், கண்மாய்கள் பராமரிப்பு

* 349 வினு—**திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தற்போது ஊராட்சி ஒன்றியங்களின் மேற்பார்வையி லுள்ள ஏரிகள், கண்மாய்கள் முதலியவை அனைத்தையும் பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?